**செய்தி வெளியீடு எண்: 384** **நாள்: 15.06.2018**

## செய்தி வெளியீடு

சட்டமுறை எடையளவு சட்டம் 2009 மற்றும் 2011ம் வருட சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் நுகர்வோர் நலனை பாதுகாக்கும் வகையில் மாதம்தோறும் சிறப்பு ஆய்வுகள் தொழிலாளர் துறையின் கீழ் உள்ள சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அலுவலர்களால் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் முதல் மற்றும் மூன்றாம் வாரத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வகையில் மே 2018ம் மாதத்தில் தொழிலாளர் ஆணையர் முனைவர். இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்களின் அறிவுரைப்படி சட்டமுறை எடையளவு சட்டம் 2009ன் கீழ் தமிழகத்தில் உள்ள நகைக்கடைகளில் அமுலாக்க அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறாக 1330 கடைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் 289 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளர்களுக்கு இசைவு தீர்வு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் 2011 – ம் வருட சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் பள்ளி நோட்டுப்புத்தகங்கள் விற்கப்படும் கடைகளிலும் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனை நிலையங்களிலும் அமுலாக்க அதிகாரிகளால் தமிழகம் முழுவதும் 856 நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் 46 முரண்பாடுகள் காணப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளர்களுக்கு இசைவு தீர்வு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்ற சிறப்பு ஆய்வுகள் இனி வரும் மாதங்களிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் முரண்பாடுகள் கண்டறியப்படின் அந்நிறுவனங்கள் மீது சட்ட விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

பொட்டலப் பொருட்களின் மீது சட்ட ரீதியான அறிவிப்புகள் இல்லாதது, பொருளில் குறிப்பிட்ட அதிகபட்ச சில்லரை விற்பனை விலைக்கு மேல் அதிகமாக விற்பனை செய்வது, விற்பனை செய்யப்படும் பொருட்கள் அளவு குறைவு காணப்படுவது போன்ற முரண்பாடுகள் தொடர்பாக தமிழக அரசின் தொழிலாளர் துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் TN-LMCTS (Tamil Nadu Legal Metrology Complaint Tracking System) என்ற கைப்பேசி செயலியை பதிவிறக்கம் செய்து அதன் மூலம் புகார் அளித்து நுகர்வோர்கள் நிவாரணம் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**